# 10

# இன்று இயேசுவை அறிந்து கொள்வது சாத்தியமா?

ஒரு நேர்காணலின் போது, ஒரு நபரிடத்தில், "நீங்கள் வரலாற்றில் யாரை சந்திக்க அதிகமாக விரும்புவீர்கள்?" என சிலசமயம் கேட்கப்படுவதுண்டு. "நசரேயனாகிய - இயேசுவை" என்பது ஒரு பொதுவான பதிலாகவுள்ளது. வேதாகமம் மற்றும் வரலாற்று புத்தகங்கள் ஆகியவை இயேசுவைப் பற்றி குறிப்பிடத்தக்க காரியங்களை கூறுவதால், நம்மில் பெரும்பாலானவர்கள் சந்திக்க விரும்பும் ஒருவராக இயேசு இருக்கிறார்.

*ஒருவரைப் பற்றி* அறிவது என்பது அந்த நபரை உண்மையிலேயே *அறிவதிலிருந்து* மிகவும் வித்தியாசப்பட்டிருக்கிறது. வரலாற்றை படிப்பதிலிருந்து, கடந்த கால மக்களைப் பற்றி நாம் அதிகமாக கற்றுக் கொள்ள முடியும், ஆனால் அவர்களை நாம் அறிந்திருக்கிறோம் என்பது அதின் பொருள் அல்ல. இந்தப் படிப்பு, இயேசுவைப் *பற்றி* நாம் என்ன அறிந்து கொள்ள முடியும் என்பதின் மேல் கவனம் குவிக்கிறது. வரலாற்றில் வேறு எந்த முக்கியமான நபரை பற்றியும் கேட்கக் கூடிய வரலாற்று ரீதியான கேள்விகளை நாம் அவரை பற்றிக் கேட்டு விட்டோம்: எந்த மூலங்கள் அவரைப் பற்றி கூறுகின்றன; அவர் எப்போது, எங்கே மற்றும் எப்படி வாழ்ந்தார்; அவர் எந்த மொழிகளை பேசினார்; அவர் தம்மைப் பற்றி என்ன நினைத்தார்; அவர் எதை விசுவாசித்தார் மற்றும் அவர் எவ்விதம் மரித்தார்? இயேசுவைப் பற்றி படிப்பதில், அவர் உண்மையில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தாரா இல்லையா என்பது சாத்தியமா என்ற கேள்வியையும் கேட்க வேண்டும்.

இப்போது நாம் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் (இயேசுவைக் குறித்த தகவல்களின் நமது பிரதான மூலங்கள்) நம்மை கேட்க தூண்டும் கேள்விக்கு வருவோம்: இன்று இயேசுவை அறிந்து கொள்வது சாத்தியமா? இது ஒரு வரலாற்று கேள்வியாக இல்லாதிருப்பினும், இயேசுவின் வரலாறு என்ன கூறுகிறதோ அதினிமித்தம் சிறப்பாக அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் மற்றும் இன்னும் அவர் பரலோகத்தில் உயிரோடிருக்கிறார் என்ற சத்தியத்தினிமித்தம் இது எழுகிறது. அது உண்மையாயிருக்குமானால், நாம் அவரை உண்மையில் அறியமுடியும் - "அவரைப் பற்றி அறிவது" மட்டும் அல்ல. இது இறையியல் மற்றும் தனிப்பட்ட நம்பிக்கைகள் என்ற பகுதியில் நுழைகிறது, அது வரலாற்று ரீதியான படிப்புகளின் வழக்கமான வழிமுறைகளில் காண்பிக்கப்படமுடியாது. நாம் இயேசுவைப் பற்றி கற்றுக் கொண்டது செல்லத்தக்கதானால், இது நாம் கேட்கவேண்டிய ஒரு கேள்வியாக இருக்கிறது. இயேசுவானவரைக் *குறித்து* எந்த மூலங்கள் கூறுகின்றனவோ அவைகள் தான் நாம் அவரை *அறியமுடியும்* என்ற ஆலோசனையை முன் வைக்கிறது. மேலும், வரலாற்று ரீதியான கேள்விகள் *மட்டுமே* நாம் கேட்க தகுதியானவைகள் அல்ல, அப்படியா?

யோவான் சுவிசேஷம் இயேசுவானவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னர் தம் பிதாவை நோக்கி ஜெபித்தார் என கூறுகிறது.

> பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங்கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும். ஒன்றான மெய்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன் (யோவான் 17:2, 3).

இயேசுவின் சொந்த வார்த்தைகளின்படி, அவரையும் மற்றும் பிதாவையும் அறிவது சாத்*தியமானது.* இதுவே "நித்தியஜீவனைப்" பற்றிய எல்லாமுமாக இருக்கிறது: தேவன் உண்மையில் யாராக இருக்கிறார் என்பதை அவருடைய குமாரனாகிய இயேசுவின் நபர்த்துவத்தில் "காண்பதாக" இருக்கிறது (யோவான் 1:14-18). அவர் தம்முடைய சமகாலத்து மக்களை குறித்து மட்டும் பேசவில்லை, ஏனெனில் பிற்பாடு அவர் தம்முடைய சீஷர்களின் வார்த்தைகளால் தம்மை விசுவாசிக்கப் போகிறவர்களுக்காகவும் ஜெபித்தார் (காண்க 17:20).

## அவர் இப்போதும் நம்மோடு இருக்கிறார்

இன்று நாம் இயேசுவை அறிந்து கொள்ள முடியும் என்ற ஆலோசனையை கொடுத்தது புதிய ஏற்பாட்டு எழுத்தாளர் யோவான் ஒருவர் மட்டும் அல்ல. அவருடைய சுவிசேஷத்தின் துவக்கத்தில், லூக்கா, தியோப்பிலுவிடம், "ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறிய வேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று" என கூறினார் (லூக்கா 1:3, 4). அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகத்தில் லூக்கா இந்த கருத்தோடு தொடர்ந்தார்: "தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்து கொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு, அவர் எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங்குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டுபண்ணினேன்" (நடபடிகள் 1:1, 2). லூக்கா தனது முதல் புத்தகம் (லூக்கா சுவிசேஷம்) இயேசுவானவர் தாம், "செய்யவும் உபதேசிக்கவும் *தொடங்கினதை"* பற்றியது என கூறியுள்ளதை கவனிக்கவும். (வலியுறுத்தல் என்னுடையது). லூக்காவை பொறுத்த வரை, கதையானது இன்னமும் முடியவில்லை, ஏனெனில் இயேசுவின் வாழ்க்கைக்கு இன்னமும் முடிவுவரவில்லை. நடபடிகளின் புத்தகம் இயேசுவானவர் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தில் *தொடர்ந்து* என்ன செய்தார் *மற்றும் போதித்தார்* - அவர் பரலோகத்திற்கு சென்ற பிறகு, அவருடைய சீஷர்களோடு அவருடைய ஆவிக்குரிய பிரசன்னம் எப்படி செயல்பட்டது என்பதையும் விவரிக்கிறது (நடபடிகள் 1:6-11). லூக்காவினால் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, இயேசுவானவர் தமது உயிர்த்தெழுதலை தொடர்ந்து தமது சீஷர்களிடத்தில் கூறிய முதல் காரியம் "பிதாவினால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட" பரிசுத்த ஆவியானவர் மிக விரைவில் வருவார் என்பதாகும்

(நடபடிகள் 1:4, 5). நாம் நடபடிகளை வாசிக்கையில், இயேசுவானவர் தமது மக்களோடு பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தில் எதைத் தொடர்ந்து செய்யவும் போதிக்கவும் செய்தார் என்பதை கற்றுக் கொள்கிறோம்.

காரியம் இப்படி இருக்கிறபடியால், "இன்று நாம் இயேசுவை அறிந்து கொள்வது சாத்தியமா?" என்ற நமது இப்போதைய கேள்விக்கு பதிலளிக்க தேடுவதற்கு நடபடிகள் புத்தகம் ஒரு நல்ல இடமாக இருக்கிறது.

## "ஒன்றைப் பற்றி அறிந்து கொள்வதிலிருந்து" ஒன்றை "அறிந்து கொள்வதற்கு"

இயேசுவானவர் நடபடிகள் 1இல் வாக்குத்தத்தம் செய்த பரிசுத்த ஆவியானவருடைய வருகை அடுத்த அதிகாரத்தில் நிஜமானது. இந்த சம்பவம் யூதருடைய பண்டிகை நாளான "பெந்தெகொஸ்தேயாக" இருந்தது. ("ஐம்பது" என்பதற்கான கிரேக்க வார்த்தையிலிருந்து, ஏனெனில் அது பஸ்காவிலிருந்து ஐம்பது நாள் கழித்து கொண்டாடப்பட்டது). இயேசு பஸ்கா பண்டிகையின் போது சிலுவையிலறையப்பட்டார், ஐம்பது நாட்கள் கழித்து எருசலேம் பெந்தெகொஸ்தே பண்டிகை கொண்டாடவந்த யாத்திரிகர்களால் நிறைந்திருந்தது. இயேசுவின் சீஷர்கள் அவர் கற்பித்தபடியே அங்கே இருந்தார்கள், மற்றும் திடீரென பரிசுத்த ஆவியின் வருகையை காட்டும் மூன்று அசாதாரணமாக தோற்றங்களுக்குள் அவர்கள் எடுக்கப்பட்டார்கள். இது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல துவங்கிற்று. அடுத்ததாக, அக்கினிமயமான நாவுகள் போல பிரிந்திருக்கும் நாவுகள் காணப்பட்டு, அவர்கள் மேல் அமர்ந்தது மற்றும் அப்போஸ்தலர்கள் தாங்கள் ஒருபோதும் கற்றிராத மொழிகளில் பேசும் அற்புத வல்லமையோடு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். (காணவும் 2:8, 11 இவைகள் "தேவனுடைய மகத்துவங்களை" கூறும் உண்மையான மொழிகளாக இருந்தன.)

இயல்பாக, இவைகள் மக்களின் கவனத்தை ஈர்த்தது. மக்கள் இது என்ன என அறிய விரும்பினார்கள். இந்த அதிசய நிகழ்வு பெந்தெகொஸ்தேயின் "முக்கிய நிகழ்வு" அல்ல, அது விளக்கப்பட வேண்டியிருந்தது, இன்னும் முக்கியமான ஒன்று அங்கே நடந்து கொண்டிருந்தது. பேதுரு எழுந்து நின்று அது என்னவாயிருந்தது என்பதை மக்களுக்கு கூறினார். அவர்கள் காண்பது நூற்றாண்டுகளுக்கு முன்னர் தீர்க்கதரிசி யோவேலினால் உரைக்கப்பட்டது; மற்றும் தீர்க்கதரிசிகள், அரசர்கள் மற்றும் இஸ்ரவேல் மக்களின் மற்ற தலைவர்கள் மேல் மட்டுமல்ல, "மாம்சமான யாவர் மேலும்" என் ஆவியை "ஊற்றுவேன்" என்ற தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறிக்கொண்டிருந்தது என்பதை பேதுரு விளக்கிக் கொண்டிருந்தார் (2:14-21). இப்போது இந்த ஆவி - கிறிஸ்துவின் பிரசன்னம் - யாவருக்கும் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. இதை விளக்கியபின், பேதுரு தேவன் எவ்விதமாக இயேசுவைக் கொண்டு பலத்த செய்கைகளை செய்தார், அவர் எவ்விதமாய் சிலுவையிலறையப்படுவதற்கு ஒப்புக் கொடுக்கப்பட்டார் மற்றும் மரணம் என்பது எப்படி அவருடைய கதையின் முடிவாக இருக்கவில்லை என்று இயேசுவைப் பற்றி சுருக்கமாக கூறினார். தேவன், இயேசுவை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினார் என பேதுரு உரிமை கோரினார், இது சங்கீதம் 16:8-11 மற்றும் 110:1 (2:22-35) ஆகிய

வசனங்களிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டு உறுதி செய்யப்படுகிறது. இதோ அவருடைய செய்தியின் உச்சக்கட்டம்: "ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள்" என்றார் (வசனம் 36).

இப்படிப்பட்ட ஒரு செய்தி அந்த நாளில் பேதுருவை கேட்பவர்களுக்கு தொல்லையளிப்பதாக இருந்திருக்கும், குறிப்பாக, அவர்கள் தான் இயேசுவுக்கு மரணத்தை வரவழைத்தார்கள் என்று சொல்லப்பட்டது அப்படி இருந்திருக்கும், மேலும், அவர்கள் நினைத்தபடி இயேசு மேசியா என்று தவறாக கூறிக் கொண்டிருந்தவர் அல்ல, ஆனால் உண்மையிலேயே அவர் தேவனுடைய மேசியாவாக மற்றும் கர்த்தராக இருந்தார், அவர்கள் உடனே பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து; "சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டதில் வியப்பில்லை (வசனம் 37). பேதுருவின் பதில் மாற்றத்தக்கதாக இருக்கவில்லை; "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்போழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவீர்கள்" (வசனம் 38). மனந்திரும்பி இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் யாரோ, அவர்கள் *பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவார்கள்* என்று பேதுரு கூறினார். வேறு வார்த்தைகளில் கூறுவதெனில், கிறிஸ்துவின் பிரசன்னம் அவர்களோடு இருக்கும். அவர்கள் சிலுவையில் அறைந்த இயேசு, இப்போது உயிர்த்தெழுந்து விட்டார், அவரை விசுவாசித்து மற்றும் அவருடைய கற்பனைகளை கைக்கொள்கிறவர்களோடு அவர் சதாகாலமும் இருப்பார். இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்பதற்கான பேதுருவின் பதில், அவர்களை வரலாற்று ரீதியான இயேசுவைப்பற்றிய செய்தியோடு இணைத்தது என்பதை கவனியுங்கள். இவரைத்தான் அவர்கள் விசுவாசித்து மற்றும் இவருக்குத்தான் அவர்கள் கீழ்ப்படிய வேண்டியது அவசியமாக இருந்தது. இவ்விதமாகத்தான் அவர்கள் அவரை "அறிந்து கொள்ள" வேண்டியதாயிருந்தது: அவரைப் பற்றிய செய்தியின் மூலமாக மற்றும் அவர்களுக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியின் வரத்தின் மூலமாக. பிற்காலத்தில், முதல் யூதரல்லாதவர்கள் இதே செய்தியை பெற்றுக் கொண்டபோது மறுபடியுமாக ஆவியானவரின் பிரசன்னம் அவர்களும் தேவனுக்கு ஏற்புடையவர்கள் என்பதை உறுதிப்படுத்தியது. (இது சமாரியர்களுக்கு [பாதி - யூதர்கள்] நடபடிகள் 8:14-16 சம்பவித்தது; புறஜாதியார் இந்த செய்தியை நடபடிகள் 10:44-48; 11:15-18ல் பெற்றுக் கொண்டார்கள்.)

பரிசுத்த ஆவியின் வரத்தை பெருவது என்பது இயேசுவைப் பற்றிய சுவிசேஷத்தை கேள்விப்படுவது விசுவாசிப்பது மற்றும் கீழ்ப்படிவதின் நேரடியான விளைவாக இருக்கிறது. இது பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் யூத அதிகாரிகள் முன் கொண்டு வரப்பட்டு, இயேசுவைப் பற்றி பிரசங்கிப்பதை நிறுத்திக் கொள்ளாவிட்டால், தண்டிக்கப்படுவார்கள் என பயமுறுத்தப்பட்டபோது நடபடிகள் 5:32ல் வலியுறுத்தப்பட்டது, அவர்கள் முதலாவது, "மனுஷருக்கு கீழ்ப்படிகிறதை பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது" என பதிலளித்தார்கள்; பிறகு அவர்கள், "இந்தச் சங்கதிகளைக்குறித்து நாங்கள் அவருக்கு சாட்சியாயிருக்கிறோம்; தேவன் தமக்கு கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும்

சாட்சி" என்றார்கள் (வசனம் 29). ஆவியானவர் (அதாவது, இயேசுவானவரின் பிரசன்னம்) அவரைப் பற்றி அறிந்து கொள்வதிலிருந்து வரவில்லை. அல்லது அது ஒரு உணர்சிவசப்படுகிற அனுபவத்தின் விளைவாக இருக்கவில்லை. இது, நாம் ஆராய்ந்து கொண்டிருக்கிற இயேசுவைப் பற்றிய உண்மையான செய்தியை ஏற்றுக் கொண்டது மற்றும் அப்போஸ்தலர்கள் கட்டளையிட்டுள்ளவைகளுக்கு கீழ்ப்படிவது - மனந்திரும்பி, இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றதால் உருவானது. இந்த வாக்கியங்களை கூறுகையில், அப்போஸ்தர்கள் என்ன செய்யவேண்டும் என்று இயேசு முன்னதாக கட்டளையிட்டிருந்தாரோ, அதை செய்து கொண்டிருந்தார்கள்:

> அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி; "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள், புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்றார் (மத்தேயு 28:19, 20).

## "பவுல், இயேசுவை சந்திக்கிறார்"

முன்னதாக, இயேசுவைப் பற்றிய மிகவும் முக்கியமான மூலாதாரத் தகவல்களில் ஒன்றாக பவுல் விளங்குகிறார் என கவனித்தோம், இவர் "புறஜாதிகளுக்கு அப்போஸ்தலன்" என தன்னை அழைத்துக்கொண்டார் (காணவும் ரோமர் 11:13; 1 தீமோத்தேயு 2:7) ஏனெனில், யூத சமயத்தின் எல்லைக்கு வெளியில் உள்ளவர்களுக்கு இயேசுவின் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல தேவன் தம்மை பிரித்தெடுத்திருந்தார் என்பதை அவர் விசுவாசித்தார் (நடபடிகள் 9:15; கலாத்தியர் 1:15, 16; 2:9) நாம் நடபடிகளின் புத்தகத்தில் முதன் முதலில் பவுலை சந்திக்கும் போது, அவர் அப்போஸ்தலனாகிய பவுலாக இருக்கவில்லை; மாறாக அவர் புதிய கிறிஸ்தவ விசுவாசத்தை கடுமையாக உபத்திரவப்படுத்துகிற தர்சு பட்டணத்தானாகிய சவுல் என்பவனாக இருந்தார் (அவர் தானே ஒத்துக்கொண்டபடி; கலாத்தியர் 1:13). அப்போது, அவர் இயேசுவானவரை அறிந்திருக்கவில்லை. அவர் விசுவாசிகளை துன்பப்படுத்துவதற்காக தன் வழியே சென்று கொண்டிருந்தபோது, இயேசு அவனுக்கு தரிசனமானார், அப்போது பவுல், "ஆண்டவரே, நீர் யார்?" என்றான், "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; ..." என்று அவனுக்கு சொல்லப்பட்டது (நடபடிகள் 9:5). இது தனக்கு என்ன அர்த்தத்தை கொடுக்கிறது என்பதை புரிந்து கொள்ள அவருக்கு மூன்று நாட்கள் தேவைப்பட்டன. அனனியா என்ற பெயருடையவர் ஒருவர் அவரிடம் சென்று, அவருக்கு தரிசனமானவர் கர்த்தராகிய இயேசுவாக இருந்தார் என்று கூறினார். அவர் அனனியாவை பவுல் பார்வையடையவும் மற்றும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படவும் தக்கதாக அவன் மேல் கைகளை வைக்கும்படி அனுப்பினதாக கூறினார் (நடபடிகள் 9:17, 18). அவர் பிற்காலத்தில் இந்த குறிப்பிடத்தக்க நிகழ்வுகளை நினைவுகூர்ந்தபோது, பவுல் (நடபடிகள் 13:13ல் இருந்து அவர் அவ்விதம் அழைக்கப்படுகிறார்)

அனனியா தமக்கு எவ்விதம், "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போக கழுவப்படு" என கூறியதை நினைவுகூர்ந்தார் (நடபடிகள் 22:16) பவுல் இவ்விதமாகத்தான் இயேசுவை அறியவந்தார்.

இயேசுவைக் குறித்து அறிவது பவுலுக்கு இன்னமும் முடியவில்லை. கிரேக்க பட்டணமாகிய பிலிப்பியிலிருந்தவர்களுக்கு எழுதின கடிதத்தில் இயேசுவை அறிவது என்பதை தாம் முன்னதாக அனுபவித்துக் கொண்டிருப்பதாகவும் மேலும் இன்னம் அதிக அதிகமாக அறிந்து கொள்ள விரும்புவதாகவும் குறிப்பிட்டார். பிலிப்பிய கிறிஸ்தவர்களை நோக்கி பவுல், இயேசுவை பின்பற்றுவது மட்டும் போதுமானதல்ல என்று கூறி, யூத பிரமாணத்தைக் - குறிப்பாக, விருத்த சேதனத்தை - கிறிஸ்துவின் சுவிசேஷத்தோடு - கூட்ட முயற்சித்தவர்களை தவிர்க்குமாறு எச்சரித்தார். (கிறிஸ்தவத்தின் ஆரம்ப நாட்களில் இது ஒரு பொதுவான பிரச்சனையாக இருந்தது; காணவும் நடபடிகள் 15:1-5; கலாத்தியர் 5:1-6.) பிலிப்பியர் 3:4-6ல் தானும் மற்ற எந்த ஒரு யூதனைப் போலவும் ஒரு அருமையான யூதன்தான் என்பதை விளக்கின பிறகு, பவுல் இதை எழுதினார்:

> ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல்,கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்.
>
> நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன் (பிலிப்பியர் 3:7-12).

பவுல் தான் முன்னதாக கிறிஸ்துவை அறிந்திருந்ததாகவும் மற்றும் கிறிஸ்துவை அதிகமாக அறிய விரும்பினதாகவும் குறிப்பிட்டார். பவுல் தான் கிறிஸ்துவை அறிவதை நிகழ்கால அனுபவமாகவும் மற்றும் எதிர்கால இலக்காகவும் கருதியிருந்தார் என்று தோன்றுகிறது, அவர் அந்த இலக்கை நோக்கி தொடர்ந்து முன்னேறி சென்றார். பவுல் கிறிஸ்துவைப் *பற்றிய* அறிவை அடைவதையல்ல

(அவர் முன்னதாக அவரை தரிசித்திருந்தார்; காணவும் 1 கொரிந்தியர் 9:1), *கிறிஸ்துவின்* அறிவை அடைவதை விரும்பினார். அவர் தான் கர்த்தரைப் போல அதிக அதிகமாக மாறுவதின் மூலம் இந்த மேலான அறிவு உண்டாகும் என குறிப்பிட்டார், சிறப்பாக அவரைப் பற்றிய செய்தியை தொடர்ந்து பிரசங்கித்து கிறிஸ்துவின் பாடுகளை பகிர்ந்து கொள்வதால் இந்த மேலான அறிவு உண்டாகிறது என குறிப்பிட்டார். இது பெரும்பாலும் அதிக விலை செலுத்தக்கூடிய ஒரு முயற்சியாக இருந்தது (காணவும் பிலிப்பியர் 1:12-30).

## ஒரு தொடர்ந்து முன்னேறும் உறவு

பவுலுடைய உதாரணத்தில் நாம் பார்த்தபடி, இயேசுவை சந்திப்பது என்பது ஒருமுறை மட்டும் நிகழக்கூடிய ஒரு சம்பவம் அல்ல. அது நமக்கு நேரிடக்கூடிய மற்றும் பிறகு நாம் அதிலிருந்து விலகி சென்று விடக்கூடிய ஒரு காரியம் அல்ல. நாம் இதை எப்படி செய்வோம்? யார் இதை விரும்புவார்? மாறாக, இயேசுவை அறிவது என்பது வாழ்க்கையை - மாற்றியமைக்கும் அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது.

யோவான், கி.பி. முதல் நூற்றாண்டின் இறுதியில் அதிக போராட்டத்தை அனுபவித்த ஒரு கிறிஸ்தவ குழுவினருக்கு தன் முதல் நிருபத்தை எழுதினார். அவர்கள், இயேசு மற்றும் கிறிஸ்து ஆகியோர் ஒரே நபர்தான் என்பதை மறுதலித்த (கினாஸ்டிக் கொள்கை போல) மற்ற விசுவாசிகளுக்கு எதிராக தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தில் இருந்தார்கள். மேலும், இந்த சபையின் எதிரிகள் இயேசுவால் போதிக்கப்பட்ட வாழ்க்கை முறையை கைவிட்டு விட்டுவிட்டார்கள் மற்றும் ஒழுக்கக்கேடான ஒரு வாழ்க்கை முறைக்கு விலகி சென்றார்கள். இதன் விளைவாக, அவர்கள் இயேசுவை அறிய*வில்லை* என யோவான் கூறினார்.

> தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாய் இருக்கிறது. நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம். அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப் பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.
>
> ... அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை (1 யோவான் 1:5-2:4).

யோவான் மற்றும் பவுல் ஆகியோர் கூறுகிறபடி, இயேசுவை அறிதல் என்பது, "... அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்" என்பதாகும். (அவர் வாழ்ந்தபடி வாழ்தல்) மற்றும் சீஷர்கள் எப்படி நடக்க வேண்டும்

என போதித்தனரோ அப்படி நடப்பதாகும் (1 யோவான் 2:6). இதன் பொருள், "இயேசுவை அறிவது என்பது," அவரைப் பற்றி வெறுமெனே ஏதோ சில உணர்வுகளை கொண்டிருப்பதல்ல, அல்லது ஒரு மாயஜால அறிவை கொண்டிருப்பதல்ல, மாறாக அது அவருடைய சமூகத்தில் அவர் வழிநடத்துகிறபடி வாழ்வதாயிருக்கிறது. அந்த வழிகாட்டி நெறிகள் புதிய ஏற்பாட்டின் ஆவணங்களாகிய 1 யோவான், பவுலின் நிருபங்கள் மற்றும் சுவிசேஷங்கள் - இயேசுவைப் பற்றி கூறுகிற அதே ஆவணங்களில் அடங்கியுள்ளன.

## ஒருபோதும் முடிவடையாத ஒரு அறிவு

இயேசுவானவர் அவரோடு நமக்குள்ள உறவு இந்த வாழ்வின் அனுபவங்களோடு முடிவதில்லை என வாக்குத்தத்தம் செய்துள்ளார். மாறாக, நாம் அவரை அறிந்திருக்கும்போது நாம் அவருக்கு சொந்தமானவர்களாக இருக்கிறோம் என கூறியுள்ளார். அவர் மீண்டும் வருவார் மற்றும் நித்தியமாக பரலோகத்தில் இருக்கும்படியாக அவருடையவர்களாக சேர்த்துக் கொள்வார். அவருடைய மரணம் மற்றும் பிரிந்து செல்லும் எண்ணத்தால் மிகவும் கலங்கியிருந்த சீஷர்களை நோக்கி, இயேசு,

> உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி,நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன் என்றார் (யோவான் 14:1-3).

அவர்களில் ஒருவனாகிய தோமா என்பவர் இயேசு. எங்கே போகிறார் என்ற வழி தெரியவில்லை என கூறிய போது, "நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று பதிலளித்தார் (14:6). நாம் இயேசுவோடு இருப்பதற்கு சிக்கலான அறிவுரைகளுக்கு விளக்கம் அளிக்கும் திறனை பெற்றிருக்க வேண்டிய அவசியமில்லை; நாம் அவரை மட்டும் பின்பற்றுவது அவசியமாயிருக்கிறது.

புதிய ஏற்பாடு இயேசுவைப் பற்றி அறிவதையல்ல, இயேசுவானவரையே அறிந்து கொள்வது சாத்தியமானது என கூறுகிறது. நாம் அவரை அவருடைய வாழ்வின் செய்தி, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாக அறிய முடியும். அந்த செய்திக்கு மனந்திரும்பி மற்றும் ஞானஸ்நானம் பெறுகிற செயல்களை செய்வதின் மூலம் அவரை அறிவோம். நம்மில் வாழ வரும் அவருடைய ஆவியானவர் மூலம் மற்றும் அவர் வாழ்ந்தபடி அவர் போதித்தபடி நாம் வாழ்வதன் மூலம் நாம் அவரை அறிவோம். நாம் அவரை அறிவோமானால், நாம் அவரோடு நித்தியமாக பரலோகத்தில் வாழ்வோம்.

ஒரு எச்சரிப்பின் வார்த்தை அவசியமாயிருக்கிறது: நாம் முன்னதாக, முதல் நூற்றாண்டில் இயேசுவை அறிந்திருந்த மற்றும் அவரை பின்பற்றி

இருந்தவர்களின் வாழ்க்கை அவர்களுடைய அனுபவங்களால் மாறியிருந்தது என்பதை கண்டோம். நாமும் கூட எப்படி மாற வேண்டிய அவசியம் இருக்கிறதோ, அப்படி உண்மையிலேயே மாற்றப்படுவோம் என்பதை நம்புவதற்கு ஏதுவுண்டு. இயேசுவை அறிந்து கொள்வது உங்களுடைய வாழ்க்கையை மாற்றும்.

நீங்கள் அவரை அறிந்து கொள்ள ஆயத்தமாயிருக்கிறீர்களா?